4 Sel

-415- -159-

# 2017-18 ஆம் நிதி ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட கனிம அறக்கட்டளையின் வருடாந்திர அறிக்கை

தமிழ்நாடு கனிம அறக்கட்டளை விதிகள்- 2017-ன் படி தருமபுரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண். 350/2017(கனிமம்) நாள். 28.09.2017-ன் படி தருமபுரி மாவட்ட அறக்கட்டளையானது கீழ்க்குறிப்பிட்ட அலவலர்களை அங்கதினராக கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது 04.10.2017-ல் தயார் செய்யப்பட்டு, ஆவண எண். 23/2017/Book4, நாள்.10.10.2017-ன் படி தருமபுரி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நிர்வாகக் குழு அமைப்பு | மேலாண்மை குழு அமைப்பு |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், தருமபுரி | மாவட்ட ஆட்சியர், தருமபுரி |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி | மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி |
| 3. | உதவி இயக்குநர், கனிமம், தருமபுரி | உதவி இயக்குநர், கனிமம், தருமபுரி. |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரம், தருமபுரி | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சி வளர்ச்சி, தருமபுரி |
| 6. | முதன்மை கல்வி அலுவலர், தருமபுரி | உதவி இயக்குநர், பஞ்சாயத்துகள், தருமபுரி |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், தருமபுரி | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், தருமபுரி |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர்,தருமபுரி | மாவட்ட மாசு கட்டுபாட்டு பொறியாளர், தருமபுரி |
| 9. | உதவி இயக்குநர், பஞ்சாயத்துகள், தருமபுரி | மாவட்ட வன அலுவலர், தருமபுரி |
| 10. | திரு.எம்.சங்கர், செயலாளர், DEEPS, தருமபுரி. | உதவி இயக்குநர், நில அளவை , தருமபுரி |
| 11. | திரு.ரவிசங்கர், த/பெ பன்னீர்செல்வம், சின்னபூலாப்பட்டி கிராமம், கொட்டுமாரனஅள்ளி அஞ்சல், காரிமங்கலம் வட்டம், தருமபுரி | மாவட்ட கருவூல அலுவலர், தருமபுரி |
| 12. | | மாவட்ட சமூக நல அலுவலர், தருமபுரி |

| | | |
|---|---|---|
| 13. | | துணை இயக்குநர், சுகாதாரம், தருமபுரி |
| 14. | | வருவாய் கோட்ட அலுவலர், தருமபுரி |
| 15. | | வருவாய் கோட்ட அலுவலர், அரூர். |

தருமபுரி மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, தருமபுரி இந்தியன் வங்கி கிளையில் சேமிப்பு வங்கி கணக்கு (கணக்கு எண்.6636419266) துவக்கப்பட்டு சிறு கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் பெருங்கனிம உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. சிறுகனிமங்களில் 57 குவாரிகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளதில் 46 சிறு கனிம குத்தகை உரிமங்களுக்கு 12.01.2015 முன் உரிமம் வழங்கப்பட்டுள்ளதால் 30 சதவீத தொகையும், மீதமுள்ள 11 குவாரிகளுக்கு 12.01.2015-க்கு பிறகு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளதால் 10 சதவீத தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் 8 கிராம ஊராட்சிகள் சுரங்கப்பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியாக 31.03.2018 வரை ரூ.1,51,09,428/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஒரு இலட்சத்து ஒன்பதாயிரத்து நானூற்று இருபத்து எட்டு மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர்,
மாவட்ட கனிம கட்டமைப்பு மற்றும் அறக்கட்டளை,
தருமபுரி.